**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224790

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 18.01.2022

Accepted: 25.02.2022

Published: 01.04.2022

Citation:
Umadevi, N. "Kaalakkanavu Play -Expression of Women's State in Society." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 4, 2022, pp. 64–69.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4790

*Corresponding Author:
umabaskar12@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kaalakkanavu Play - Expression of Women's State in Society

**Dr. N. Umadevi**
*Post Doctorate Research Scholar, Department of Tamil*
*Gandhigram Rural Institute-Deemed University*
*Gandhigram, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0002-0371-1321*

**Abstract -** In nature's creation, men and women are equal in all respects. But in social parlance it is prevailing as a contradiction. Women are inferior and the concept of male supremacy and patriarchy has been configured in the society. Women's rights and the concept of feminism are denied in the society. Women are conferred with enormousus potential in nature. Women can renew themselves from the problems faced by them similar to the capability of nature that can restore its energy by itself. The society has made women, not able to realise this fact by imposing conceptualisations based on emotional constraints and by restricting their freedom of movement. 'Kaalakkanavu' – play has been created by V. Geetha, to make people realise about the capabilities and rights of women. In this play, the portrayal of historical facts of women, the revelation of the state of women in the society and the need for women to realise about their position and social status were stressed. And all these aspects are explained in-detail in this essay.

**Key Words:** Tamil Dram, Feminisim, A. Mangai, Kalakanavu.

**References**

1. Geetha, V. 2010. *Kaalakkanavu Penniya Varalatru Naadagam*, Trichy, Adayalam Publications.
2. Sarala Rasagopalan. 2007. Peraanmaiyaalargalin Pennurimai Sinthanaigal, Chennai, Oli publications.
3. Thirunavukkarasu, K. 1991. Dhiravida Iyakka Vergal, Chennai, Nakkeeran Publications.
4. Muthu Chithambaram, 1995. Penniyam Thotramum Valarchiyum, Thirunelveli, Muthu Publications.

# காலக்கனவு நாடகம் சித்திரிக்கும் சமூகத்தில் பெண் வெளிப்பாடு

*முனைவர் ந. உமாதேவி*
முதுமுனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்

***ஆய்வுச் சுருக்கம்***
*உயிர்களின் படைப்பில் இயற்கையில் ஆணும் பெண்ணும் சமம். ஆனால் சமூகக் கோட்பாட்டில் இது முரணாக அமைந்துள்ளது. ஆண் உயர்ந்தவன் பெண் தாழ்ந்தவள் என்ற ஆணாதிக்கக் கருத்தாக்கம் சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. பெண்ணுரிமை மறுக்கப்பட்டுள்ளது இயற்கையில் பெண் பேராற்றல் மிக்கவள். இயற்கை தன்னைப் புதுப்பித்துக் கொள்வது போல் பெண்ணும் தனது பிரச்சினைகளில் இருந்து தன்னை புதுப்பித்துக்கொள்ளும் பேராற்றல் மிக்கவள். இதை உணர விடாமல் உணர்வுரீதியான கருத்தியல்களால் பெண்ணை சமூகம் கட்டி வைத்துள்ளது. பெண்ணின் ஆற்றலைச் சித்திரிக்கும் வகையில் “காலக்கனவு’ நாடகத்தை வ.கீதா எழுதியுள்ளார். இந்நாடகத்தில் பெண்ணின் வரலாறு, சமூகத்தில் பெண்ணின் நிலை, அதன் வழி சமூகத்தில் பெண் தன் நிலையை உணரவேண்டியதும் விளக்கப்பட்டுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்நாடகம், பெண்ணியம், அ. மங்கை, காலக்கனவு*

## முன்னுரை

‘ஒரு வர்க்கத்தின் ஆணினம் அனுபவிக்கும் உரிமைகளை அந்த வர்க்கத்தின் பெண்ணினம் சமமாக அனுபவிக்க வேண்டும்’ என்றார் பெரியார். ஆனால் சமூகம் காலம்காலமாக ஆணுக்கு ஒருவகையாகவும் பெண்ணுக்கு வேறுவகையாகவும் வரையறைகளை வகுத்து வைத்துள்ளது. பத்தினி, விதவை, சுமங்கலி, அமங்கலி, வாழாவெட்டி, கைம்பெண், மலடி போன்ற பெயர்கள் பெண்களுக்கு மட்டுமே இருக்கின்றன. இவற்றைக் குறிக்கும் ஆண்பால் சொற்கள் தமிழில் இல்லை. இவை பெண்ணுக்கு மட்டுமே உரியனவாகவும், பெண்ணே அனைத்துச் சமூகத் துயரங்களும் அனுபவிப்பவதற்குப் பிறந்தவள் என்னும் வகையில் இச்சொற்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடி சுதந்திரக்காற்றை சுவாசிக்கப் பலர் போராடி வருகின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் பெரியாரியப் பெண்ணிய ஆய்வாளர் வ. கீதா. அவர் எழுதி அ.மங்கையின் நெறியாள்கையின் கீழ் நிகழ்த்தப்பெற்ற “காலக்கனவு” பெண்ணிய வரலாற்று ஆவண நாடகம், அடையாளம் பதிப்பக வெளியீடாக, வெளிவந்துள்ளது. அந்நாடகத்தில் சமூகத்தில் நிலவும் பெண்களுக்கான இழிநிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். அதன்வழிப் பெண்ணுக்கான துயரங்களுக்குச் சமூகம் எவ்வாறு காரணமாக அமைந்துள்ளது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. சமூகத்தில் பெண் வெளிப்பாடு எவ்வாறு உள்ளது என்பதையும், பெண்ணுக்கான பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் எடுத்துரைப்பதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

## குழந்தை திருமணம்

பெண்களைச்சிறுவயதிலேயேதிருமணம் முடித்து வைப்பதற்குக் குழந்தை மணம் என்று பெயர். இத்திருமணம் முன்பு அதிகமாக நடத்தப்பட்டது. மிகச் சாதாரணமாக அறியா வயதுப் பெண்களை வயது முதிர்ந்த ஆண்கள் திருமணம் செய்துகொண்டதை நாடகவரிகள் எடுத்துரைக்கின்றன. நபர் 3 :

எட்டுல இருந்து பனிரெண்டு வயசுக்குள்ள இருந்த பொம்பளப் புள்ளைங்கள, இருபத்தைஞ்சிலயிருந்து நாப்பது வயசுக்குள்ள இருந்த ஆம்பளைங்க சர்வ சாதாரணமா கல்யாணம் கட்டுனாங்க (காலக்கனவு - ப.23) பெண்கள் பருவம் அடைவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப்பட்டனர். இவ்வாறு செய்து வைக்கப்படும் திருமணங்களினால் அவர்களின் உடல்நிலை பாதிக்கப்படுவதோடு மன உளைச்சலுக்கு ஆளாயினர். பெண்ணின் அழகைக் காப்பாற்ற - கற்பைக் காப்பாற்ற இளமைத் திருமணத்தைப் புகுத்தினர். பருவம் அடைந்த பிறகு - அறிவு வளர்ந்த பிறகு - சிந்தனை வளர்ந்த பிறகு - தாங்கள் விலைபேசும் வரனை அவள் மறுத்தலும் கூடும் என்ற அச்சமும் இதற்குக் காரணமாகலாம். ஆடவர்களின் சுயநலத்திற்காக - இளைய சமுதாயம், அதிலும் பெண்குலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. (சரளாஇராசகோபாலன், பேராண்மையாளர்களின் பெண்ணுரிமைச் சிந்தனைகள், ப.33) குழந்தைத் திருமணம் என்பது சமூகத்தின் அவலம் என்று சமூகப்போராளி சாவித்திரிபாய்பூலே கூறுகின்றார். இந்தச் சிறுவயது பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். பெண்ணின் திருமண வயதை 21 ஆக உயர்த்த வேண்டும் என்ற சிந்தனை எழுந்துள்ள இக்காலத்திலும் பெண்களுக்கு விரைவாகவே திருமணம் செய்து வைக்கப்படும் அவலநிலையும் தொடர்கின்றது. பெண்ணுக்கான காதல் மணம் மறுக்கப்படுவதும், தொடர்ச்சியாக நிகழும் சமூக ஆணவக் கொலைகளும் பெண்ணைப் பெற்ற பெற்றோரிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவு பெண்களுக்கு விரைவில் திருமணம் நிகழ்த்தப்படுவது, அதன் தொடர்ச்சியாகக் குழந்தைபேறு, கணவன் மனைவிக்குள் புரிதல் இல்லாமல் விவாகரத்து போன்ற தொடர் துயரங்களைப் பெண் இன்று மீண்டும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### பெண் திருமண முக்கியத்துவம்

சமூகத்தில் ஆண் பெண் இருவரும் சமம் என்றாலும், சமூகக் கட்டுப்பாடுகள் பெண்ணிற்கே அதிகமாக விதிக்கப்படுகின்றன. இங்கு ஆண் தனியாக வாழ முடியும். ஆனால் பெண் இங்கு தனியே வாழ இயலாது. திருமணம் செய்யாத பெண்கள் சமூகத்தின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக வேண்டியுள்ளது. திருமணம் செய்வது மட்டுமே பெண்ணின் வாழ்நாள் சாதனையாகக் கூறப்படுகிறது. ஆனால் பெண்ணிற்குத் தெய்வம் அவள் கணவன் அல்ல என்று ஒரு இஸ்லாமியப் பெண் கூறுவதாக நாடகம் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. நபர் 2 : ஒரு கட்டுரையாளராக, நாவலாசிரியராக, சூஃபிமார்க்க அறிஞராக வாழ்ந்த சித்தி ஜீனைதா..... 1955ல் நூருல் இஸ்லாம் அப்படிங்கிற இதழ்ல இப்படி எழுதுறாங்க. ஒரு முஸ்லீம் பெண் தன்னில் தானே ஒளிவீசுகிறாள். அவள் பெயருக்கு அவளே உரிமை பெற்றவள். அவள் செல்வத்துக்கும் அவளே அதிகாரி. அவளுக்குத் திருமணம் நடந்துவிட்டால் தன் உரிமைகள் அனைத்தையும் இழந்து விடுவதில்லை. அவளுக்கென்று தனியான ஆன்மா உண்டு. அவள் தெய்வம் அவள் கணவன் அல்ல. (காலக்கனவு. ப.48)என்ற வரிகளின் அழுத்தம் குறிக்கத்தக்கது. பெண் என்பவள் தனித்தவள் அவளுக்கெனத் தனியான உணர்வுகள், வாழ்க்கை உண்டு. அவளை மீண்டும்மீண்டும் திருமணத்திற்குள் புகுத்தத் தேவையில்லை என்பதை நாடகம் உணர்த்துகின்றது. திருமணம் செய்யாமல் தனித்துச் சுயமாக வாழும் பெண்களைத் திமிர் பிடித்த பெண்களாகவே பார்க்கும் போக்கினைச் சமூகத்தில் இன்றும் காண முடிகிறது.

### விதவை மறுமணம்

வாடா பூப்போன்ற மங்கை நல்லாள், மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ? என்று பாரதிதாசன் விதவை மறுமணம்

குறித்துக் கூறுகின்றார். இந்திய சமூகத்தில் விதவைகளின் நிலை மிகவும் மோசமானதாக இருந்தது. மிகவும் கேவலமாக நடத்தப்பட்டனர்; 1931- ஆம் ஆண்டு இந்தியாவில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்குப்படி கீழ்க்காணுமாறு வெவ்வேறு வயதுக்குட்பட்ட விதவைகளின் எண்ணிக்கை இருந்தது எனில் இதன் தீவிரம் புலப்படும்.

| விதவைகளின் வயது | விதவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 0-1 | 597 |
| 1-2 | 492 |
| 2-3 | 1257 |
| 3-4 | 2837 |
| 4-5 | 6707 |
| 5-10 | 85937 |
| 10-15 | 23217 |
| 15-20 | 742820 |
| 25-30 | 1163720 |
| மொத்தம் | 2631788 |

இக்கணக்கெடுப்பு இளம் விதவைகளின் அவலத்தினை உணர்த்தும் (ச. முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றம் வளர்ச்சியும், ப.க் 108, 109). ஆரம்ப காலத்தில் இருந்த தோற்ற மாறுபாடு இன்று இல்லையென்றாலும் இன்றும் கணவனை இழந்த பெண்கள் பாதிக்கப்படும் நிலையே தொடர்கின்றது. ஆணின் மறுமணம் இங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அது ஆணுக்குத் துணையாகவும், பெண் மறுமணம் செய்வது என்பது ஒழுக்கம் சார்ந்ததாகவும் பாலியல் தேவையாகவும் பார்க்கப்படுகிறது. ஆனால் விதவை மறுமணத்தை 1930 களிலேயே மரகதவல்லி என்ற பெண் ஆதரவு தெரிவித்து மாதர் மறுமணம் என்ற பத்திரிகையில் எழுதியதை நாடகம் எடுத்துரைக்கின்றது.

நபர் 2 : என்ன ஆச்சிரியம் பாருங்க, (கல்யாணம் பண்ணிகிட்டு புருஷன் செத்துப் போயிட்டா, பொண்ணுங்க போயி மூலையில மொடங்கிக்கணும்னு இருந்த காலத்தில, அப்படி இருந்த பெண்களுக்கு மறுவாழ்வு கொடுக்கணும் அப்படீங்கிறத வலியுறுத்தி அதையே பெயராக வச்சு ஒரு பத்திரிகை வந்திருக்கு. அதுவும் 1930 கள்ல (காலக்கனவு, ப.52) என்னும் வரிகள் விதவை மறுமணத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துரைக்கின்றது. 1930களில் இருந்த இந்நிலை மாற்றம் பெற்றுள்ளதா என்று சிந்தித்தால் இல்லை என்றே தோன்றுகிறது. கணவனை இழந்த பெண்களின் தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வண்ண உடைகள் உடுத்திக் கொள்வது, கருப்புப் பொட்டு என்று மாற்றம் நிகழ்ந்துள்ளனவே தவிர, சுப நிகழ்வுகளில் பங்கு பெற இயலாதது இன்றைய அறிவியல் யுகத்திலும் தொடர்கின்றது. மேலும் எந்தவொரு திருமணமாகாத ஆணும் விதவைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முன் வருவதில்லை என்பதும் வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

**பிள்ளைப்பேறு,**

பெண் உடல் இங்கு அவளுக்கானதாக இல்லை. பூப்பு தொடங்கி திருமணம், பிள்ளைப்பேறு என்று எதிலும் அவளுக்கு உரிமை கிடையாது. ஆரம்ப காலத்தில் பத்துப் பதினைந்து பிள்ளைகள் பெற்று பெண் அவதியுறும் நிலை நிலவியது. இந்த அவல நிலையைத் தடுக்கவே பெரியார் 1928-ஆம் ஆண்டு முதன்முறையாகக் கர்ப்ப ஆட்சி என்ற குறைவாகக் குழந்தை பெறும் குடும்ப நலத்திட்டத்தைக் கொள்கையாக அறிவித்துப் பிரச்சாரம் செய்தார். கர்ப்ப ஆட்சி என்ற சொல்லே பெரும் கலகக்குரலாக அன்று பார்க்கப்பட்டது. தன் கர்ப்பத்தின் மீது உள்ள ஆளுகை என்பது இதன் பொருள். ஒரு காலத்தில் பெண் அதிகப் பிள்ளைகள் பெற்றுத் துயருற்றாள் என்றால், இன்று பிள்ளை பேற்றுக்காகப் பெண் படும் துயரமும் அதிகம். மலடி என்ற வசைச்சொல், சமூகநிகழ்வுகளில் அங்கீகரிக்காமை, பெண்களே அவர்களை இழிவு செய்தல், போன்றவை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதனாலேயே எல்லா இடங்களிலும் குழந்தையின்மைக்கான

மருத்துவமனைகளும் அதில் பெண்கள் பரிசோதனைக்கூட எலிகளாக நடத்தப்படுவதும், நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன. இது பெண் விருப்பத்துடன் நிகழ்வது இல்லை. சமூகம் கொடுக்கும் மனஅழுத்தமே இதற்கு முக்கியக் காரணம். ஆனால் குழந்தைப் பேறு இல்லாமலும் கணவன் மனைவியால் ஆனந்த வாழ்வினை வாழமுடியும் என்று நாடக வரிகள் காட்டுகின்றன.

நபர் 1 : இலட்சிய மணவாழ்க்கை என்னவென்று எங்களுக்குத் தெரியும். அந்த அருளார்ந்த இன்பத்தை ஒவ்வொரு கணமும் நாங்கள் அனுபவித்து வருகிறோம். எனக்குத் குழந்தைப்பேறு இல்லாமல் போனாலும் உலகம் இன்னும் இன்பமயமானதாகவே உள்ளது. பிறர் என்னைத் துரதிருஷ்டசாலி என்று எண்ணுவர். சபிக்கப்பட்டவள் என்று கூட நினைப்பர். ஆனால் எனக்கு எல்லாமான இயேசுவிடம் நாம் நம்பிக்கை வைத்துள்ளதால் எல்லாம் இன்பமயமானதாகவே இருக்கிறது (5.11.1924) (காலக்கனவு , பக் 27, 28)

1924-ம் ஆண்டில் ஒரு பெண்ணால் இவ்வளவு இயல்பாகச் சிந்திக்க முடிகிறது. ஆனால் இன்று வரை பிள்ளைப்பேறில்லாத பெண்களால் இவ்விஷயத்தைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள இயலவில்லை. பெண்கள் சபிக்கப்பட்டவர்களாகப் பார்க்கப்படுவதற்குக் காரணம், சமூகம் பெண்ணின்மீது திணிக்கும் மன அச்சுறுத்தல்களே.

## தேவதாசிமுறை

“பொட்டுக் கட்டுதல்” என்ற முறைப்படி கோயிலுக்கு நேர்ந்து விடப்படும் பெண்கள் கடவுளின் மனைவி என்று புனிதமாகக் கூறப்படுகின்றனர். குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களில் மணமாகாத பெண்ணைக் கடவுளுக்கு மணமுடித்து விடுவார்கள். அதற்கு அடையாளமாக ஒரு தாலியும், காலில் மிஞ்சியும் மெட்டியும் அணிவிக்கப்பட்டிருக்கும். அன்று முதல் அவள் பொதுமகளாகி விடுவாள். (க.திருநாவுக்கரசு, திராவிட இயக்க வேர்கள், ப.235). கடவுளின் மனைவிகள் என்று பெயர் ஒருபுறம், மறுபுறம் ஊரின் முக்கியப் பிரமுகர்கள், பணம் படைத்தவர்களுக்குக் கட்டாய ஆசைநாயகிகளாக ஆக்கப்பட்டனர். தேவதாசிகளை நாடிச்செல்வது ஆண்களுக்கு மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்டது. ஆனால் அப்பெண்கள் விலைமகளிர் என்றும் தேவரடியார்கள் என்றும் வசை பாடப்பட்டனர். இந்தக் கொடுமைகளில் இருந்து இந்தப் பெண்கள் மீளமுடியாமல் தவித்து வந்தனர் என்பதை,

நபர் 2: நான் இழந்த வாழ்க்கையை நாணம் விட்டுச் சொல்லவா என்ன செய்வேன், ஏது செய்வேன்? மூர்த்தியே உன்பதியென்றார் சதிசெய்தென்னை மாய்த்துவிட்டார். கோயில் வாசல் அடைத்துக்கொள்ள நரகவாசல் திறந்ததம்மா. (காலக்கனவு , ப.33) என்ற தேவதாசிப்பாடல் அப்பெண்களின் வலியினை உணர்த்துகின்றது. இக்கொடுமையை ஆணாதிக்கச் சமூகம் ஆதரித்துப் பாதுகாத்து வந்தது. இதனை எதிர்ப்பவர்கள் சமூக விரோதிகளாகச் சித்திரிக்கப்பட்டனர். இந்தச் சமூக அவலத்தைப் போக்கியவர்களில் முக்கியமானவர்கள் இருவர். ஒருவர் டாக்டர் முத்துலெட்சுமி, மற்றொருவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மாள்.

நபர் 2 : தாசிகள் அவங்க தொழில் தொடர்ந்து மேற்கொள்ளுறதுக்கு அவுங்க பிறந்த சாதிதான் காரணம்னு முத்து லெட்சுமி நெனச்சாங்க. சாதிய எல்லா நிலையிலேயும் எதிர்த்தாங்க.

நபர் 4 : இராமாமிருதத்தம்மா இத வேற ஒரு கோணத்தில பார்த்தாங்க. தேவதாசிங்க இந்த தேவதாசித் தொழில் தொடர்ந்து செய்யறதுக்கு அவங்க சார்ந்திருக்கிற இந்த மதம்தான் காரணம்னு நெனச்சாங்க (காலக்கனவு , ப.39)

இந்த இருவரது தொடர் முயற்சிகளின் காரணமாக தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் 1929 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்றும் இந்நிகழ்வு இருக்கின்றது என்பதற்கு லீனா மணிமேகலையின் மாத்தம்மா என்ற ஆவணப்படம் சான்று. கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டாலும் சமூகத்தில் பெண்ணுக்கான அவலங்கள் மாற்றமின்றி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

## தொகுப்புரை

1. அன்றைய சமூகத்தில் மிகவும் சிறு வயதுப் பெண்களை வயது முதிர்ந்த ஆண்கள் சாதாரணமாகத் திருமணம் செய்துள்ளனர். இன்று குழந்தை மணம் இல்லை. ஆனால் திருமண வயதை அடையும் முன்பே விரைவாக இளவயதில் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுகிறது. இது பெண்ணின் உள உடல் சிக்கல்களுக்குக் காரணமாக அமைகின்றது.
2. சமூகத்தில் பெண்ணிற்கு மட்டுமே திருமணம் வலியுறுத்தப்படுகிறது. திருமணம் செய்வதால் அவள் உரிமைகள் இழந்து விடுவதில்லை அவளின் தெய்வம், கணவன் அல்ல அவளுக்கென்று ஒரு தனி வாழ்க்கை உள்ளது என்பதை நாடகம் வலியுறுத்துகின்றது.
3. கணவனை இழந்த பெண்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டும் என்பதை நாடகம் உணர்த்துகின்றது. இந்த அறிவியல் யுகத்திலும் கணவனை இழந்த பெண்கள் சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள இயலாமை, மறுமணம் செய்வதில் சிரமம் போன்ற சமூக அவலங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன.
4. சிறப்பான திருமண வாழ்க்கை என்பது பிள்ளைப்பேற்றில் இல்லை. கணவன் - மனைவியின் ஆத்மார்த்தமான அன்பில் மட்டுமே இருக்கின்றது. பிள்ளை பெற்றுக்கொள்வதும் பிள்ளைப்பேறு வேண்டாம் என்று கூறுவதும் அவளின் தனிப்பட்ட உரிமையாக வேண்டும்; சமூகம் நிர்ப்பந்திக்கக் கூடாது. எனவே
5. கர்ப்ப ஆட்சி என்பது பெண்ணுக்குரியதாக வேண்டும் என்பதைக் கட்டுரை எடுத்துரைக்கின்றது.
6. தேவதாசி முறையின் மூலம் பெண்கள் இழிநிலைக்கு ஆளானதை அறிய முடிகின்றது.

இந்நாடகம் எண்பது வருடங்களுக்கு முற்பட்ட பெண்களின் வாழ்க்கையையும் அவர்களின் தீவிரப் போராட்டங்களையும் எடுத்துரைக்கின்றது. நூற்றாண்டுகள் கழித்தும் பெண்களுக்கான பிரச்சினைகள் வேறு உருவில் தொடர்கின்றன. பெண்ணின் சுய வரலாறுகள் பொது வெளிசமூகத்திற்கு மறைக்கப்பட்டதே இன்றும் பெண்ணுக்கான இழிநிலைகள் தொடரக் காரணம். பெண்களின் போராட்ட வரலாறுகளை இன்றைய பெண்கள் அறிந்து கொண்டால் பெண்ணின் எழுச்சி சாத்தியம் ஆகும். பெண் பேராற்றல் மிக்கவளாகக் கிளர்ந்து எழுவாள். பெண்களின் வரலாறு இளைய சமுதாயத்துக்குத் தெரிய இந்நாடகம் இன்றியமையாததாக அமைகின்றது.

## பார்வை நூல்கள்

1. கீதா.வ, காலக்கனவு (பெண்ணிய வரலாற்று ஆவண நாடகம்), (2010) அடையாளம் பதிப்பகம், புத்தானந்தம்.
2. சரளா இராச கோபாலன்.(2007). பேராண்மையாளர்களின் பெண்ணுரிமைச் சிந்தனைகள், சென்னை, ஒளிப் பதிப்பகம்.
3. திருநாவுக்கரசு. க, (1991) திராவிட இயக்க வேர்கள், நக்கீரன் பதிப்பகம், சென்னை. முத்துச்சிதம்பரம். ச, (1995), பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், முத்துபதிப்பகம், திருநெல்வேலி.